சென்னையில் மழை பாதித்த பகுதிகளில் 2–வது நாளாக எடப்பாடி ஆய்வு

நிவாரண உதவிகளை வழங்கினார்

சென்னை, நவ.9–

சென்னையில் வெள்ளநீர் சூழ்ந்த வடசென்னை பகுதியில் துறைமுகம், ஆர்.கே.நகர் உட்பட பல்வேறு பகுதிகளை எடப்பாடி பழனிசாமி இன்று நேரில் பார்வையிட்டு மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கி ஆறுதல் தெரிவித்தார்.

நேற்று தென்சென்னை பகுதியில் பாதித்த பகுதி மக்களை சந்தித்து ஆறுதல் கூறி நிவாரண உதவிகளை வழங்கினார்.

வடகிழக்குப் பருவமழை தீவிரமடைந்ததன் காரணமாக சென்னையில் பல்வேறு பகுதிகளிலும் வெள்ளக்காடாக காட்சியளிக்கிறது. இதனால் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ள நிலையில் மக்கள் அவதிக்குள்ளாகி வருகின்றனர்.

எதிர்க்கட்சித் தலைவரும் முன்னாள் முதல்வரும் அண்ணா திமுக இணை ஒருங்கிணைப்பாளருமான எடப்பாடி பழனிசாமி, சென்னையில் மழையால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு சென்று பார்வையிட்டு வருகிறார்.

இன்று காலை வீட்டில் இருந்து புறப்பட்ட எடப்பாடி பழனிசாமி கடற்கரை சாலை, போர் நினைவு சின்னம் வழியாக சென்ட்ரல் ரெயில் நிலையத்துக்கு வந்தார்.

பின்னர் வால்டாக்ஸ் சாலை பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட இடங்களை பார்வையிட்டார். யானை கவுனி போலீஸ் நிலைய அருகே வெள்ளம் சூழ்ந்த பகுதிகளை பார்வையிட்ட பின் அங்குள்ள அம்மன் கோவிலில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரண உதவிகளை வழங்கினார்.

வேட்டிசேலை, போர்வை உள்ளிட்ட உதவிகள் வழங்கபட்டதுடன் உணவுகளும் வழங்கப்பட்டன.

அதன் பிறகு தங்கசாலை, திருவொற்றியூர் சாலை, வைத்தியநாதன் மேம்பாலம் வழியாக சென்று பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட்டார். அதைத் தொடர்ந்து எம்.ஜி.ஆர். நகர், எழில் நகர் பகுதிகளில் நிவாரண உதவிகள் வழங்கப்பட்டன.

ஆர்.கே.நகர் வழியாக முல்லை நகருக்கு சென்று பாதிக்கப்பட்ட இடங்களை பார்வையிட்டு நிவாரண உதவிகளை வழங்கினார்.

பின்னர் மூலக்கடை, சிம்சன், பல்லவன் சாலை, பேப்பர் மில் சாலை, 70 அடி சாலை, அன்னை சத்யா நகர், கங்கா தியேட்டர் வழியாக சென்று வெள்ளம் தேங்கி இருந்த பகுதிகளை பார்வையிட்டார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஆறுதல் கூறியதுடன் அங்குள்ள முத்து மாரியம்மன் கோவிலில் வைத்து நிவாரண உதவிகள் வழங்கினார்.

அதே போல பாபா நகர் பகுதியையும் அவர் பார்வையிட்டு நிவாரண உதவிகளை வழங்கினார்.

எடப்பாடி பழனிசாமியுடன் முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார், அமைப்பு செயலாளர் ஜே.சி.டி. பிரபாகர், மாவட்ட செயலாளர்கள் நா.பாலகங்கா, ஆர்.எஸ்.ராஜேஷ், டி.ஜி.வெங்கடேஷ் பாபு ஆகியோரும் சென்றனர்.

அண்ணா தி.மு.க. இணை ஒருங்கிணைப்பாளரும், முன்னாள் முதலமைச்சருமான எடப்பாடி பழனிசாமி, இரண்டாவது நாளாக இன்று தமிழகத்தில் பெய்துவரும் பெருமழையின் காரணமாக பாதிக்கப்பட்டுள்ள, வடசென்னை மாவட்டம், ஆர்.கே. நகர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட இடங்களைப் பார்வையிட்டதோடு, எம்.ஜி.ஆர். நகர், எழில் நகர் மற்றும் முல்லை நகர் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த பாதிக்கப்பட்டுள்ள மக்களின் இல்லங்களுக்கே நேரில் சென்று நலத்திட்ட உதவிகளை வழங்கி ஆறுதல் கூறினார். கழக அமைப்புச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான டி. ஜெயக்குமார், வடசென்னை வடக்கு (கிழக்கு) மாவட்டச் செயலாளர் ஆர்.எஸ். ராஜேஷ் உள்ளிட்ட கழக நிர்வாகிகளும் உடனிருந்தனர்.

எடப்பாடி பேட்டி

சென்னை வில்லிவாக்கத்தில் அவர் செய்தியாளர்களிடம் பேசியதாவது:–

தமிழ்நாட்டில் பெய்த கனமழை காரணமாக சென்னை மாநகரமே வெள்ளக்காடாக மாறியுள்ளது. 3 நாட்கள் ஆகியும் பல பகுதிகளில் வெள்ளநீர் வடியாமல் இருக்கிறது. இதனால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். பல இடங்களில் அதிகாரிகள் நேரில் சென்று பார்வையிடவில்லை என பொதுமக்கள் குற்றம் சாட்டியுள்ளனர். மழைநீர் தேங்கி கிடக்கும் இடங்களில் மோட்டார் மூலம் நீரை வெளியேற்ற வேண்டும்.

முன்னெச்சரிக்கை நடவடிக்கை இல்லை

பொதுமக்களுக்கு குடிநீர், உணவு கிடைக்காமல் இருக்கிறது. மின்சாரம் தடை செய்யப்பட்டுள்ளது. குழந்தைகளுக்குப் பால் கிடைக்கவில்லை. போதிய மருத்துவ வசதி கிடைக்கவில்லை. தி.மு.க. அரசு எந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கையும் எடுக்காத காரணத்தாலேயே மழைநீர் தேங்கி இருக்கிறது. எனவே இந்த தி.மு.க. அரசு விரைந்து செயல்பட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான உதவிகளை செய்ய வேண்டும்.

தமிழ்நாட்டில் அண்ணா தி.மு.க. ஆட்சியில் தான் சென்னை மாநகர மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்திருக்கிறோம். அண்ணா தி.மு.க. ஆட்சியில் மழைநீர் தேங்கிக் கிடக்கும் இடங்களைக் கண்டறிந்து அந்தப் பகுதியில் வடிகால் வசதி செய்து கொடுக்கப்பட்டது. உலக வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கி, ஜெர்மன் வளர்ச்சி வங்கி, தமிழ்நாடு அரசு நிதி, மாநகராட்சி நிதி ஆகியவைகளின் நிதியைக் கொண்டுதான் இத்திட்டம் நிறைவேற்றப்பட்டது.

மழைநீர் வடிகால் வசதி

குறிப்பாக அண்ணா தி.மு.க. ஆட்சியில் ரூ.1,385 கோடி மதிப்பீட்டில் அடையாறு, கூவம் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் வசதி செய்து கொடுக்கப்பட்டது. இதனால்தான் கனமழை பெய்தாலும் கூட அந்தப் பகுதிகளில் மழைநீர் தேங்காமல் இருக்கிறது.

எண்ணூர் முகத்துவாரத்தில் அடைப்பு இருந்த காரணத்தால் வெள்ள நீர் விரைவாகக் கடலில் கலக்க முடியாமல் இருந்தது. இதனால் வடசென்னையில் தாழ்வான பகுதியில் நீண்ட நாட்களாக மழைநீர் தேங்கி இருந்தது. இந்நிலையில் அண்ணா தி.மு.க. ஆட்சியில் நெடுஞ்சாலைத் துறையின் மூலம் எண்ணூர் முகத்துவாரத்தில் புதிய மேம்பாலம் கட்டப்பட்டது. இதனால் தற்போது அப்பகுதியில் தண்ணீர் தேங்காமல் இருக்கிறது.

அரசுக்கு வேண்டுகோள்

ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் மூலம் சுமார் ரூ.18 கோடி மதிப்பீட்டில் வில்லிவாக்கம் ஏரி தூர்வாரப்பட்டது. மேலும் அங்கு நடைப்பயிற்சி பூங்கா, படகு சவாரி போன்ற பணிகள் தற்போது முடியும் தருவாயில் உள்ளது. வில்லிவாக்கம் ரெயில்வே மேம்பாலம் முடியும் தருவாயில் உள்ளது.

மேலும் ஸ்மார்ட் சிட்டி திட்டத்தின் கீழ் ரூ.200 கோடி மதிப்பீட்டில் மழைநீர் வடிகால் பணிகள் முடிந்துள்ளன. கொசஸ்தலை பகுதியில் ரூ.3 ஆயிரத்து 220 கோடி மதிப்பீட்டில் 869 கிலோமீட்டர் நீளத்தில் ஒருங்கிணைந்த மழைநீர் வடிகால் அமைக்க திட்டமிடப்பட்டது. இதில் ரூ.250 கோடி மதிப்பீட்டில் 95 கிலோமீட்டர் நீளத்தில் பணிகள் முடிந்துள்ளன. மீதமுள்ள பணிகளை இந்த அரசு விரைவில் துவங்கி முடிக்க வேண்டும். இதுபோன்ற திட்டங்கள் அண்ணா தி.மு.க. ஆட்சியில் தான் நிறைவேற்றப்பட்டன.

அவர்கள் என்ன செய்தார்கள்?

வடகிழக்குப் பருவமழை தொடங்குவதற்கு முன்பே இந்த அரசு தூர்வாரி இருக்க வேண்டும். அண்ணா தி.மு.க. ஆட்சிக் காலத்தில் ஆகஸ்டு மாதத்திலேயே தூர்வாரப்படும்.

தமிழ்நாடு முதலமைச்சர் 10 ஆண்டுகளாக அண்ணா தி.மு.க. அரசு எந்த நடவடிக்கையும் எடுக்காமல் இருந்ததால் சென்னையில் பல இடங்களில் மழைநீர் தேங்கி இருப்பதாக குற்றம் சாட்டியுள்ளார். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆகியோர் 5 ஆண்டுகளாக மேயராக இருந்துள்ளனர். ஸ்டாலின் துணை முதலமைச்சராக இருந்தார், உள்ளாட்சி துறை அமைச்சராகவும் இருந்தார். அவர்கள் அப்போது என்ன செய்து கொண்டிருந்தார்கள்?. அவர்கள் மக்களுக்கு எந்த நன்மையும் செய்யவில்லை.

இவ்வாறு எடப்பாடி பழனிசாமி தெரிவித்தார்.

தமிழக மழை, வெள்ளம்: நிதியை உடனடியாக வழங்க பிரதமருக்கு ஓ.பி.எஸ். வலியுறுத்தல்

சென்னை, நவ. 9–

மழை, வெள்ள மீட்பு மற்றும் நிவாரணப் பணிகளை மேற்கொள்ள ஏதுவாக தமிழகத்துக்கான நிதியை உடனடியாக விடுவிக்க நிதித் துறைக்கு உத்தரவிடுமாறு வலியுறுத்தி பிரதமர் நரேந்திர மோடிக்கு அண்ணா தி.மு.க. ஒருங்கிணைப்பாளர் ஓ.பன்னீர்செல்வம் கடிதம் எழுதியுள்ளார்.

இது தொடர்பாக அண்ணா தி.மு.க. ஒருங்கிணைப்பாளரும், முன்னாள் முதலமைச்சருமான ஓ.பன்னீர்செல்வம் அனுப்பிய கடிதத்தின் விவரம் வருமாறு:–

சென்னை மற்றும் அதன் அண்டை மாவட்டங்களில் கனமழை காரணமாக பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்பதை தாங்கள் அறிவீர்கள். சென்னையின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் அதிக மழை பெய்துள்ளதால் உபரி நீர் வெளியேற்றப்பட்டு வருகிறது. இதனால் பல பகுதிகளில் இடுப்பு அளவு தண்ணீர் உள்ளது. இதனால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், அடுத்த 5 நாட்களுக்கு, அதிக கனமழைக்கு வாய்ப்புள்ளதாக இந்திய வானிலை ஆய்வு மையம் எச்சரித்துள்ளது. தென் கிழக்கு வங்கக்கடலில் உருவாகியுள்ள காற்றழுத்தத் தாழ்வுநிலை காற்றழுத்த தாழ்வு மண்டலமாக உருவாகும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் மழை வெள்ள மீட்பு, நிவாரணப் பணிகளுக்குத் தேவையான உதவிகளை மத்திய அரசு செய்யும் என்று தாங்கள் அளித்துள்ள வாக்குறுதிக்கு தமிழக மக்கள் நன்றியை உரித்தாக்குவார்கள். ஆனால் அதையும் தாண்டி, குடிசைகள், வசிப்பிடங்கள் சேதங்களுக்கு இழப்பீடு அளிக்க வேண்டும். அதனால் நிதியமைச்சகத்துக்கு உத்தரவிட்டு தமிழகத்துக்கான நிதியை உடனடியாக விடுவிக்க உத்தரவிட வேண்டும். இவ்வாறு அக்கடிதத்தில் ஓ.பன்னீர்செல்வம் கூறியுள்ளார்.

பொது அறிவிப்பு

எனது கட்சிக்காரரான சென்னை600102. அண்ணா நகர், 9வது மெயின் ரோடு, சாந்தி காலனி, பிளாட் எண். 2A, KG வில்லா. A1 பிளாக் எண் 91 என்ற விலாசத்தில் வசிக்கும் வேணு அவர்களின் மகன் 72 வயதுடைய திரு. V.T.ராமன் என்பவரின் சார்பாக நான் அளிக்கும் பொது அறிவிப்பு என்னவெனில், திரு.V.T.ராமன் அவர்களின் தம்பி மகன் திரு.விஷ்ணு தபெ (லேட்) ரகுபதி அவர்களுக்கு சொந்தமான சொத்து விவரம் வேலூர் மாவட்டம்,வேலூர் வட்டம் சத்துவாசாரி மதுரா ரங்காபுரம் கராமத்தில் சர்க்கார் பழைய சர்வே எண். 141/1 இதற்கு சப் டிவிசின் படி புதிய சர்வே எண். 14/52A இதில் ஆற்காடு ரோட்டில் வடவாண்ட வாடையில் கதவு எண்கள். 11, 11 11/B, 11/C இவைகளுக்கு ஜெக்பந்தியம் அளவு விவரம் மேற்படி ஆற்காடு ரோட்டுக்கு வடக்கு சர்வே எண் 141/51க்கு கிழக்கு சர்வே எண். 141/49க்கு தெற்கு சர்வே எண் 141/535க்கு மேற்கு இதன் மத்தியில் கிழக்கு மேற்கு தென்புரம் 12.2 மீட்டர் வடபுரம் 122 மீட்டர் வடக்கு தெற்கு மேல்புரமும் 318 மீட்டர் கீழ்புரம் 296 மீட்டர் ஆக மொத்த பரப்பளவு 375 சதுர மீட்டர் 4036 ½ சதுரடி இந்த அளவுள்ள அடிமனையும் கொண்ட சொத்து சம்மந்தமான அசல் பத்திர எண் 1906/1975 என்ற விற்பனை பத்திரம் மற்றும் செட்டில்மென்ட் பத்திரம் எண்940/2013 என்ற ஆவணம் வேலூர் மாவட்ட இணை சார்பதிவாளர் II அவர்களின் முன் கிரையம் செய்துள்ளார். மேற்படி சொத்துக்குரிய பத்திரம் விட்டில் இருந்த குப்பை பொருட்கள், 15 நாட்களுக்கு முன் அகற்றிய போது காணவில்லை. மேற்படி சொத்துக்குரிய பத்திரம் கிடைக்கப் பெற்றால் அதனை மேற்படி விலாசத்தில் தொடர்பு கொண்டு திருப்பி அளிக்க கேட்டுக்கொள்கிறேன். எனது கட்சிக்காரரின் பத்திரத்தை தவறாக பயன்படுத்தி விற்கவோ அல்லது யாருக்காவது பத்திரம் செய்தாலோ சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என்று இந்த பொது அறிவிப்பு மூலம் அறிவிக்கப்படுகின்றது

S.K.Chandrakumar
S.G.Alli Chandrakumar
Advocates,
No.149, N–Block, Annna Nagar.

பெயர் மாற்றம்

ரக்ஷனா ராஜேஷ் ஜெயபாரதி **(RAKSHANA SRI RAJESH JAYABHARATHI)**, பிறந்த தேதி:05/11/2010, எண்.10/26, காமராஜர் தெரு, உள்ளகரம், நங்கநல்லூர், சென்னை - 600061, என்ற முகவரியில் குடியிருக்கும் எனது மகள் இனி Given Name : **RAKSHANA SRI**, Surname : **GOKULRAJU** என்று அழைக்கப்படுவார்.

கோகுல்ராஜு (அப்பா)
ஜெயபாரதி (அம்மா)

பெயர் மாற்றம்

ஜனனி ராஜேஷ் ஜெயபாரதி **(JANANI RAJESH JAYABHARATHI)**, பிறந்த தேதி:09/02/2013, எண்.10/26, காமராஜர் தெரு, உள்ளகரம், நங்கநல்லூர், சென்னை - 600061, என்ற முகவரியில் குடியிருக்கும் எனது மகள் இனி Given Name : **JANANI**, Surname : **GOKULRAJU** என்று அழைக்கப்படுவார்.

கோகுல்ராஜு (அப்பா)
ஜெயபாரதி (அம்மா)

SHRIRAM TRANSPORT FINANCE CO LTD
THIRUKAZHUKUNDRAM BRANCH — VEHICLE FOR SALE

S.NO.	VEH.NO.	MAKE	MODEL
1.	TN19E-5961	TATA ACE	2011
2.	TN21AY -4361	TAFE 5245	2007

CONTACT PERSON :MOHANRAJ .S , MOBILE NO:9840994528

ஏலத்தேதி மாற்று அறிவிப்பு

K.B. வெங்கடேசன் – அடகு கடை, பஜார் வீதி,பேரம்பாக்கம் 631402, என்ற வணிகரின் அடகு கடையில் 08/01/2017 முதல் 29/12/2019 வரை அடகு வைத்து மீட்கபடாத பொருட்களின் ஏலம் 09112021 அன்று காலை 11.00 மணிக்கு நடைபெறவிருந்தது. அந்த ஏலத்தேதி மாற்றபட்டு 18112021 அன்று காலை 11.00 மணிக்கு மேல் திருவள்ளூர் மாவட்டத்தில் உள்ள திருவள்ளூர் துணை வட்டாட்சியர் முன்னிலையில் அரசு ஒப்புதல் பெற்ற ஏலதாரர் M/S. குருசாந்தி ஏலதாரரால் ஏலம் போடப்படும்.

ENROLLMENT NOTICE

After 10 days of the publication of this notice and within three months there after. I, RAMPRABU.S, S/o. M.Selvam, aged 34 years, permanently residing at No. 14, Vanniyar Street, New Vandipalayam, Cuddalore –607004. intend having my enrollment as an Advocate moved before the bar council of Tamilnadu, bar council building, high court campus, chennai-600 104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

RAMPRABU.S

****

After 10 days of the publication of this notice and within three months there after. I, J. VIJAYABALAN, S/o. A. Jebamani, aged 29 years, permanently residing at No.34, Indra Nagar, Inspector Jayaraj Street, Poonamallee, Chennai – 600 056. intend having my enrollment as an Advocate moved before the bar council of Tamilnadu, bar council building, high court campus, chennai-600 104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

J. VIJAYABALAN

****

After 10 days of the publication of this notice and within three months there after. I, P NAREN SWAMINATHAN, S/o. G Prasanna, aged 23 years, permanently residing at No. 2, Old No.11, 50th Street, Ashok Nagar, Chennai – 600 083. intend having my enrollment as an Advocate moved before the bar council of Tamilnadu, bar council building, high court campus, chennai-600 104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

P Naren Swaminathan

****

After 10 days of the publication of this notice and within three months there after. I, M.MOHAMMED YOUSUF, S/o. Mohamed Mubarak, aged 32 years, permanently residing at No.922/2, EVR Periyar Salai, Purasaiwalkam, Chennai–600 084. intend having my enrollment as an Advocate moved before the bar council of Tamilnadu, bar council building, high court campus, chennai-600 104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

M.MOHAMMED YOUSUF

****

After 10 days of the publication of this notice and within three months there after. I, J.PADMA PRIYA, D/o. P.Jagadeesan, aged 43 years, permanently residing at No.214, Flat –A, Harini's Dhanam, Chowdry Nagar Main Road, Valasaravakkam, Chennai –600 087. intend having my enrollment as an Advocate moved before the bar council of Tamilnadu, bar council building, high court campus, chennai-600 104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

J.PADMA PRIYA

****

After 10 days of the publication of this notice and within three months there after. I, R.PRAVEEN KUMAR, Father Name: V.Ravi, aged 24 years, permanently residing at No. 55, C–Block, Chetty Garden, MS Kovil Street, Royapuram, Chennai–600 013. Temporary Address: No.16/29, Gandhi Nagar, 2nd Street, Tolgate, Thiruvottiyur, Chennai –600 019. intend having my enrollment as an Advocate moved before the bar council of Tamilnadu, bar council building, high court campus, chennai-600 104.

Those who have any valid objections may notify the same to the bar council with in ten days.

R.PRAVEEN KUMAR

II JUDGE
Before the Motor Accident Claims Tribubal at Chennai
M.C.O.P.No. 2998 of 2021

1. Chappidi Ravanamma
2. Chappidi Maraiah

... Petitioners

-VS-

1. Sunkara Rangaiah
2. TATA AIG General Ins. Co. Ltd., ... Respondents

To,
Sunkara Rangaiah,
S/o Venkataiah,
No. 3/1131-1 Shanthi Nagar,
Cuddapah,
Andhra Pradesh - 516 002.
. .. 1st Respondent

Please take notice that the above case has been posted to 11.01.2022 for your appearance, appear in person or through your pleader, failing which the matter will be decided in your absence.

M.PACHAIYAPPAN
Counsel for Petitioner

மேன்மைமிகு வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம் சமூகம் திருத்தணி

திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், மேல் நெடுங்கல் காலனி, நெடுங்கல் போஸ்ட், மேட்டு தெரு, நெ.362, விலாசம் கொண்ட வீட்டில் வசிக்கும் மனுதாரர் திரு. R.கோபி த/பெ. ராஜிகான் என்பவர் அவரது மகன் R.பிரவீன் குமார் த/பெ.ரவி கடந்த 28.05.2007ம் தேதி அவரது வீட்டில் பிறநததாக காலதாமதமாக மனு செய்துள்ளார். இதில்,எவருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் 15 தினத்திற்க்குள் திருத்தணி கோட்டாட்சியர், பள்ளிப்பட்டு வட்டாட்சியர், பொதட்டூர்பேட்டை வருவாய் ஆய்வாளர் ஆகியோரிடம் எழுத்து பூர்வமாக சமர்பிக்க வேண்டியது. தவறும் பட்சத்தில் மனுதாரருக்கு பிறப்புச் சான்று வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

கவிதா
வருவாய் ஆய்வாளர்
பொதட்டூர்பேட்டை.

பெயர் மாற்றம்

S.DIVITH PRANAV, தாய் பெயர்: Priya Sambath, பிறந்த தேதி: 17.05.2011, நெ.20/16, பாரதி தெரு, அவ்வை நகர், பெரியார் பாதை ரோடு, சூளைமேடு, சென்னை– 600 094, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **P.DIVITH PRANAV**, என்று அழைக்கப்படுகிறேன்.

S.DIVITH PRANAV

பெயர் மாற்றம்

சௌகத்அலி.(SHOWKATHALI) தந்தை பெயர்: முஹம்மத் யூசுப். (MOHAMED YUSUF) பிறந்த தேதி: 20/05/1961. (சொந்த மாவட்டம் கடலூர்), க.எண்:1/25. பழைய தெரு, டி. மாவிடந்தல் அஞ்சல், விருத்தாசலம் வட்டம், கடலூர் மாவட்டம்606104. தமிழ் நாடு என்ற முகவரியில் வசிக்கும் நான், இனி காதர் ஷரிப் **(KADHAR SHARIF)** அழைக்கப் படுகிறேன்.

சௌகத்அலி.
(SHOWKATHALI).

பெயர் மாற்றம்

முகமது யாசின் ஹிதாயத்துல்லா. (MUHAMED YASIN HIDAYADHULLA) தந்தை பெயர்: ஹிதாயத்துல்லா. (S/O: HIDAYADHULLA) பிறந்த தேதி: 07.08.1972. (சொந்த மாவட்டம்: கள்ளக்குறிச்சி), குணமங்கலம், வெள்ளையூர் அஞ்சல், உளுந்தூர்பேட்டை வட்டம், கள்ளக்குறிச்சி மாவட்டம் – 606107. என்ற முகவரியில் வசிக்கும் நான். இனி முகமது யாசின் ஹிதாயத்துல்லா **(MOHAMED YASIN HIDAYATHULLAH)** அழைக்கப்படுகிறேன்.

முகமது யாசின் ஹிதாயத்துல்லா
(MUHAMED YASIN HIDAYADHULLA).

பெயர் மாற்றம்

சலிமுன் பீ (SALIMUN BE) கணவர் பெயர்: காதர் ஷரிப். (Kadhar Sharif) பிறந்த தேதி: 20.04.1963. (சொந்த மாவட்டம்: கடலூர்), கதவு எண்:1/25, பழைய தெரு, டி.மாவிடந்தல் அஞ்சல், விருத்தாசலம் வட்டம், கடலூர் மாவட்டம்– 606104. தமிழ் நாடு என்ற முகவரியில் வசிக்கும் நான், இனி சலிமா பீ (SALIMA BEE) அழைக்கப் படுகிறேன்.

சலிமுன் பீ.
(SALIMUN BE)

பெயர் மாற்றம்

Mohideen Abdul Khader Mohamed Hafeezdeen, தந்தை பெயர்: Mohideen Abdul Kader, பிறந்த தேதி: 01.02.2001, நெ. 124, Dr. பெசன்ட் ரோடு, ராயப்பேட்டை, சென்னை – 600014, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **MOHIDEEN ABDUL KADER MOHAMMED HAFEEZDEEN,** என்று அழைக்கப்படுகிறேன்.

Mohideen Abdul Khader Mohamed Hafeezdeen

ஏலத்தேதி மாற்று அறிவிப்பு

BAGGYALAKSHMI NIDHI LIMITED, NEW NO.39A, (50A), GOUTHAM COLONY, SIR R.K.SHANMUGAM SALAI, K.K.NAGAR, CHENNAI 600 078. என்ற நிதியில் 29012020 முதல் 31102020 வரை அடகு வைத்து மீட்கப்படாத தங்க நகைகள் 10/11/2021 புதன் கிழமை மதியம் 2.30 மணிக்கு நடக்கவிருந்த ஏலம் 17/11/2021 அன்று 2.30 மணிக்கு மேல் அரசு ஒப்புதல் பெற்ற ஏலதாரர் M/s. குருசாந்தி அவர்களால் மேற்கண்ட விலாசத்தில் ஏலம் போடப்படும்.

2-வது சிறப்பு நீதிபதி
மோட்டார் வாகன விபத்து நஷ்ட ஈட்டு தீர்ப்பாயம், சென்னை-600 104.
மனு எண் 2369/2021

E.பானுமதி ...மனுதாரர்

எதிர்

K. சுந்தரராஜன் மற்றும் ஒருவர் ...எதிர் மனுதாரர்கள்

பெறுனர் : K. சுந்தரராஜன்,
பிளாட் எண்.3, 3வது மாடி,
வசந்த் அப்பார்ட்மெண்ட்டு,
நெ.102, வன்னியர் தெரு,
சூளைமேடு,சென்னை-600094.

மேற்கண்ட வழக்கு தங்களின் வருகைக்காக 13.12.2021 அன்று வாய்தா போடப்பட்டுள்ளது. அன்றைய தினம் காலை 10.30 மணிக்கு தாங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி தங்களின் அட்சேபணையை தெரிவிக்க வேண்டும். தவறினால் மேற்கண்ட வழக்கில் தங்களுக்கு எதிராக ஒரு தலைபட்சமாக வழங்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

கே. இரவிக்குமார்
வழக்கறிஞர்

மேன்மைமிகு திண்டிவனம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற நீதிபதி அவர்கள் சமூகம்
I.A. No. 481/2019
in
O.S. No. 117/2011

தென்னரசு மற்றும் 2 நபர்கள்
... மனுதாரர்கள்/வாதிகள்

எதிர்

திண்டிவனம் வட்டம், மைலம் கிராமம், பாளையம் தெரு, நெ. 23ல் வசிக்கும் கன்னப்பிள்ளை குமாரர் பாபு
... 7ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி

மனுதாரர்கள்/வாதிகள் பிரதிவாதிகளுக்கு எதிராக 3/8 பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி I.A. No. 481/2019 மனுவில் தங்களை தரப்பினராக சேர்க்க மனு தாக்கல் செய்துள்ளார். இதில் தங்களுக்கு ஏதேனும் ஆட்சேபனை தாக்கல் செய்ய சமூகம் நீதிமன்றத்தில் வருகின்ற 23.11.2021 அன்று வாய்தா வைக்கப்பட்டுள்ளது. அன்று காலை 10.00 மணிக்கு தாங்கள் வழக்கறிஞர் மூலமோ அல்லது நேரிலோ சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டியது. தவறும் பட்சத்தில் தங்களுக்கு எதிராக ஒருதலைபட்சமாக தீர்ப்பு செய்யப்படும் என்பதை கண்டிப்பாய் அறியவும்.

K.ராமகிருஷ்ணன் B.A.B.L,
வழக்கறிஞர்,

மேன்மைமிகு திண்டிவனம் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற நீதிபதி அவர்கள் சமூகம்
I.A. No. 480/2019
in
O.S. No. 117/2011

தென்னரசு மற்றும் 2 நபர்கள்
... மனுதாரர்கள்/வாதிகள்

எதிர்

திண்டிவனம் வட்டம், மைலம் கிராமம், பாளையம் தெரு, நெ. 23ல் வசிக்கும் கன்னப்பிள்ளை குமாரர் பாபு
... 7ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி

மனுதாரர்கள்/வாதிகள் பிரதிவாதிகளுக்கு எதிராக 3/8 பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார். மேற்படி I.A.No. 480/2019 மனுவில் தங்களை தரப்பினராக சேர்க்க மனு தாக்கல் செய்துள்ளார். இதில் தங்களுக்கு ஏதேனும் ஆட்சேபனை தாக்கல் செய்ய சமூகம் நீதிமன்றத்தில் வருகின்ற 23.11.2021 அன்று வாய்தா வைக்க பட்டுள்ளது. அன்று காலை 10.00 மணிக்கு தாங்கள் வழக்கறிஞர் மூலமோ அல்லது நேரிலோ சமூகம் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டியது. தவறும் பட்சத்தில் தங்களுக்கு எதிராக ஒருதலைபட்சமாக தீர்ப்பு செய்யப்படும் என்பதை கண்டிப்பாய் அறியவும்.

K.ராமகிருஷ்ணன் B.A.B.L,
வழக்கறிஞர்,

பெயர் மாற்றம்

SARBUDEEN, கணவர் பெயர்: Maseethal Beevi, பிறந்த தேதி: 21.10.1939, நெ.3.64, மீசல் வில்லேஜ் அஞ்சல், திருவரங்கம், பிரபக்கல்லூர், முத்துகுளத்தூர், ராமநாதபுரம் – 623707, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **SHARFUDDIN**, என்று அழைக்கப்படுகிறேன்.

SARBUDEEN

பெயர் மாற்றம்

MASITHAL BEEVI, கணவர் பெயர்: Sharfuddin, பிறந்த தேதி: 20.07.1943, நெ.3.64, மீசல் வில்லேஜ் அஞ்சல், திருவரங்கம், பிரபக்கல்லூர், முத்துகுளத்தூர், ராமநாதபுரம் – 623707, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **Maseethal Beevi**, என்று அழைக்கப்படுகிறேன்.

MASITHAL BEEVI

பெயர் மாற்றம்

Karpaga Ganesan, தந்தை பெயர்: Sabapathy Raja, பிறந்த தேதி: 20.04.1987, நெ. 157/82, கீழ ரத வீதி, சிதம்பரம், கடலூர் – 608 001, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **Given Name: Karpagaganesh Deekshithar, Surname: Sabapathy Raja,** என்று அழைக்கப்படுகிறேன்.

Karpaga Ganesan

பெயர் மாற்றம்

Senthil Kumar Arumugam, தந்தை பெயர்: Arumugam, பிறந்த தேதி: 01.10.1974, VIBA Flat, 1வது மாடி, பு.நெ.59, ப.நெ.39, 53வது தெரு, 9வது அவென்யு, அசோக் நகர், சென்னை – 600 083, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **Senthil Arumugam,** என்று அழைக்கப்படுகிறேன்.

Senthil Kumar Arumugam

பெயர் மாற்றம்

Syed Syed Shakeel Ahemed, தந்தை பெயர்: Syed Mahmood, பிறந்த தேதி: 10.04.1966, நெ. 521, 1வது மாடி, டி.வி.கே. நகர், 13வது தெரு, பெரம்பூர், சென்னை – 600 011, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **SHAKEEL AHAMED SYED**, என்று அழைக்கப்படுகிறேன்.

Syed Syed Shakeel Ahemed

உதவி சீட்டுப் பதிவாளர், சீட்டுப் பதிவாளர் அவர்களின் நடவடிக்கைகள்

முன்னிலை: திருமதி.பெ.இளங்கிளி உதவி சீட்டுப் பதிவாளர்

மத்தியஸ்த வழக்கு எண்: 22/2021
நாள்:28/10/2021

ஸ்ரீ குகன் சிட்பண்ட்ஸ் (பி) லிமிடெட்,
நெ.44/85, ஜோஷி டவர்,
கிழக்கு வீதி, திருக்கோவிலூர்
.மனுதாரர்கள்

1.M.JENIFER PIRIYANKA,
W/O, G.ANANND
NO.31/1, THEPAKULA STREET,
THIRUKOILUR, 605757
2.T.RANJITH KUMAR ,
S/O.THANGARAJ
DHAYASTHALAM CAMPUS,
HOSPITAL ROAD
THIRUKOILUR 605757
3.P.ANBU, S/O PICHANDI
2/5 B, ANCHANEYAR KOIL
STREET, N.G.G.O NAGAR,
THIRUKOILUR, 605757
4.G.ANAND,S/O, GOVINDARAJAN
NO.31/1, THEP